AR
42

# திருமலை மன்னர் அரண்மனை அகழ்வைப்பகக் கையேடு



# திருமலை நாயக்கர் அரண்மனை
# அகழ்வைப்பகக் கையேடு


பதிப்பாசிரியர்

**முனைவர் சீ. வசந்தி** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.

ஆணையர் பொறுப்பு

ஆசிரியர்கள்

**முனைவர் சொ. சாந்தலிங்கம்**

**திரு. சொ. சந்திரவாணன்**



**வெளியீடு**

**தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை**

**சென்னை -600 008**

**2013 - திருவள்ளுவர் ஆண்டு 2044**



மறுபதிப்பு - 2013 - திருவள்ளுவர் ஆண்டு 2044

வெளியீட்டு எண் : 237

பிரதிகள் 1000

பக்கங்கள் 36



© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை



திருமலை நாயக்கர் அரண்மனை
அகழ்வைப்பகக் கையேடு

பதிப்பாசிரியர்
முனைவர் சீ. வசந்தி
ஆணையர் பொறுப்பு

ஆசிரியர்கள்
முனைவர் சொ. சாந்தலிங்கம்
திரு. சொ. சந்திரவாணன்

விலை : ரூ.13.00

வெளியீடு
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 8

முனைவர் **சீ. வசந்தி** எம்.ஏ.,எம்.பில்., பிஎச்.டி.
ஆணையர் பொறுப்பு

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008
நாள் : 13.12.2013

# பதிப்புரை

தமிழகத் தொல்லியல்துறை கல்வெட்டுகளைப் படியெடுத்து அச்சிட்டு வெளியிடுவது, மற்றும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் அகழாய்வு செய்து அவ்வறிக்கைகளை நூலாக வெளியிடுவது, ஓலைச் சுவடிகள், செப்பேடுகள் போன்றவற்றை வாசித்து வெளியிடுவது போன்ற பணிகளுடன் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்களில் வரலாற்றுச் சின்னங்களை அகழ்வைப்பகங்கள் அமைத்து அப்பகுதியின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்தவும், பாதுகாத்தல் போன்றவற்றையும் செய்து வருகின்றது.

அவ்வகையில் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையிலுள்ள அகழ்வைப்பகத்தில் மதுரை மற்றும் மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் கிடைத்த பழந்தொல்பொருட்கள், நுண்கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற்காலப் பொருட்களும், முதுமக்கள் தாழிகள், கருப்பு சிவப்பு வண்ண மட்கலயங்கள் முதலியனவும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சேர, சோழ, பாண்டிய, நாயக்க மன்னர்கள் காலத்திய கற்சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன.

இவற்றுடன் தமிழகத்தில் கிடைத்துள்ள தமிழ் பிராமிக் கல்வெட்டுகளில் சுமார் அறுபது கல்வெட்டுகள் இம்மாவட்டத்தில்தான் கிடைத்துள்ளமையால் அக்குறிப்புகள் இவ்வரண்மனையின் அந்தப்புறப் பகுதியில் 'கல்வெட்டுக் கலைக்கூடம்' ஒன்றும் அண்மையில் நிறுவப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இங்குள்ள மாங்குளம் கல்வெட்டு, நீராவி, சாத்தூர், கழுகுமலைக் கல்வெட்டுகளும் 'துறகை உள்ளாரு கல்லும்' வரலாற்றைக் காலந்தோறும் எடுத்துக்கூறும் சான்றுகளாகும்.

திருக்குறளை மேற்கோளாகக் காட்டியுள்ள எல்லிஸ் கல்வெட்டும் சிறப்பிடம் பெற்றுள்ளது. சங்கிலும். பானை ஓடுகளிலும் எழுத்துப் பொறிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவ்வகழ்வைப்பகக் கையேட்டினை எழுதியுள்ள முனைவர் சொ. சாந்தலிங்கம், சொ. சந்திரவாணன் ஆகியோருக்கு எனது உளங்கனிந்த பாராட்டுகள். இந்நூலினை உரிய நேரத்தில் வெளிவர உதவிய அச்சுப்பிரிவினருக்கு எனது பாராட்டுக்கள்.

மதுரை அகழ்வைப்பக கையேடு அனைவருக்குப் பயனுள்ளதாக இருக்கும் என எண்ணுகிறேன்.

சீ. வசந்தி

# முன்னுரை

சங்க காலம் தொடங்கித் தமிழ் இலக்கியத்திலும் வரலாற்றிலும் சிறப்பிடம் பெற்றுத் தனிச் சிறப்புடைய தமிழ் நகர் மதுரை. 'பாடல்சால் சிறப்பின் பாண்டியன் பெருஞ்சீர் மாடமதுரை' எனப் புகழப்படுகின்ற மதுரை வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே தனக்கென ஒரு சிறப்பினைக் கொண்டு விளங்கி வந்திருக்கின்றது.

மீனாட்சியம்மன் கோயிலை மையமாக வைத்து அமைக்கப்பட்டுள்ள மதுரை நகர் அமைப்பு; தாமரை மொட்டின் மையம்போலக் கோயிலும் அகன்று விரிந்த இதழ்கள் அன்ன தெருக்களும், விண்ணுயர் மாடமாளிகையும், வைகை நதியும் காண்பார் வியக்கும் வண்ணம் அழகுமிக்க நகர்களில் ஒன்றாகும் என்றால் அது மிகையாகா !

இக்கோயிலின் தென்கிழக்கில் அமைந்துள்ள இந்திய மொகலாயக் கூட்டமைப்பில் உருவான கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திருமலை நாயக்கர் அரண்மனை கட்டடக்கலை வரலாற்றில் சிறப்பான ஒன்று. இவ்வரண்மனை தமிழ்நாடு அரசு பாதுகாக்கப்பட்ட மரபுச் சின்னங்களில் ஒன்றாகக் கருதிப் பாதுகாத்து வருகின்றது.

இவ்வரண்மனையில் சொர்க்கவிலாசம், ரங்கவிலாசம் எனும் இரண்டு பெரும் பகுதியில் சொர்க்கவிலாசம் பகுதியில் திருமலை நாயக்கரும், ரங்கவிலாசம் பகுதியில் அவர்தம் தம்பி முத்தியாலு நாயக்கரும் ஆட்சி செய்துவந்தனர். சொர்க்கவிலாசத்தின் அருகிலுள்ள அந்தப்புரப் பகுதியில் கல்வெட்டுக் கலைக் கூடம் அமைத்துச் சிறப்பு செய்தது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை. இங்கு இடம் பெற்றுள்ள தமிழ் பிராமிக் கல்வெட்டுகள், வட்டெழுத்துக் கல்வெட்டுகள் முதலியனவும், திறந்தவெளிச் சிற்பக் கூடமும் ஆய்வாளர்களுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் கருத்தைக் கவரும் காட்சிக் கூடமாகும் எனில் அது மிகையில்லை.

இவ்வழகிய காட்சியகக் கையேட்டினை உருவாக்க ஆக்கமும் ஊக்கமும் தந்த முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் திருமிகு முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப, அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வெய்துகின்றோம்.

இந்நூலினை உருவாக்கத் துணைநின்ற அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எங்கள் நன்றியினைக் காணிக்கை யாக்குகின்றோம்.

**சொ. சாந்தலிங்கம்**
**சொ. சந்திரவாணன்**

# திருமலை நாயக்கர் அரண்மனை

## மன்னன்

கி.பி. 1623-லிருந்து 1659 வரை மதுரையைத் தலைநகராகக் கொண்டு சீரும் சிறப்புமாக ஆண்ட திருமலை நாயக்கரால் இவ்வரண்மனை எடுக்கப்பட்டது. தென்னிந்தியாவில் எஞ்சியுள்ள பண்டைய அரண்மனைகளில் மிகவும் எழில் வாய்ந்தது இதுவே. இவ்வரண்மனையைத் திருமலை மன்னர் 1636-ல் கட்டி முடித்தார். இதில் தம்முடைய 75-ம் வயது வரை மனைவியருடன் வசித்தார்.

திருமலை மன்னன் கட்டியபோது இப்போது எஞ்சியுள்ளதைக் காட்டிலும் நான்கு மடங்கு பெரியதாக இவ்வரண்மனை திகழ்ந்தது. இவ்வரண்மனையின் பல பகுதிகளைப் பற்றிய பண்டைய குறிப்புகள் உள்ளன. இங்கு சொர்க்கவிலாசம், ரங்கவிலாசம் என்று இரண்டு முக்கிய பகுதிகள் இருந்தன. தவிர, பதினெட்டுவித இசைக்கருவிகள் இசைக்கும் இடம், பல்லக்கு முதலியவை வைக்கும் இடம், பூஜை செய்யும் இடம், அரியணை மண்டபம், தேவியரின் அந்தப்புரம், நாடகசாலை, உறவினர்களும், பணிசெய்வார்களும் வசிக்கும் இடங்கள், வசந்தவாவி, மலர்வனங்கள், சுற்றுமதில் முதலியன இருந்தன. திருமலை நாயக்கர் சொர்க்க விலாசத்திலும் அவர் தம்பி முத்தியாலு நாயக்கர் ரங்கவிலாசத்திலும் வசித்தனர்.

இப்பொழுது எஞ்சி உள்ள பகுதியே சொர்க்கவிலாசம் என்பது. இப்பொழுதுள்ள அரண்மனை நுழைவாயில் முதலில் வைக்கப்பட்டது அல்ல. அரண்மனையின் நுழைவாயில் இக்கட்டடத்தின் வடக்கில் இருந்தது. கட்டடத்தின் கிழக்குப்புறத்தில் பக்கத்துக்கு ஒரு சிகரமாக இரண்டு சிகரங்கள் இருக்கின்றன. இவற்றின் மேல் இருந்த ஸ்தூபிகள் தங்கத்தால் செய்யப்பட்டு இருந்தன. தற்பொழுது வடபுறச் சிகரத்தில் ஒரு கடியாரம் வைக்கப்பட்டுள்ளது.



## முற்றம்

உள்ளே நுழைந்ததும் ஒரு பெரும் முற்றவெளியும் சுற்றிலும் உயரமான தூண்கள் தாங்கிய கட்டடமும் உள்ளன. மேற்கில் வேலைப்பாடுகளுடைய ஒரு கட்டடப்பகுதி உள்ளது. முற்றத்தின் வடக்கிலும் தெற்கிலும் நடுவில் சாலை வடிவமான மிகவும் உயர்ந்த கட்டடப் பகுதிகள் இருக்கின்றன. இவற்றின் ஸ்தூபிகளும் பொன்னால் செய்யப்பட்டிருந்தன.

## சொர்க்கவிலாசம்

இரண்டு குதிரைச் சிற்பங்கள் அலங்கரிக்கும் படிகளின் வழியே, மேற்கில் எழில் வாய்ந்த பகுதியை அடையலாம். இதுவே சொர்க்கவிலாசம் என்பது. மிகவும் நெடிய தூண்களும், எழிலார்ந்த சுதை வேலைப்பாடுகளும், குவிந்து மேலே தோன்றும் விமானங்களும் கலைத்திறனின் எடுத்துக்காட்டுக்கள். பார்க்கப்பார்க்க பரவசம் ஊட்டுபவை. இப்பகுதியின் நடுவில் மிகவும் விசாலமான இடமும் அதன் மேல் குவிந்து உயர உயரச் செல்லும் விதமானமும் நாம் சொர்க்கத்தில் நிற்கிறோமோ என்னும் வியப்பைத் தோற்றுவிக்கும். ஆதலால் தான் இதைச் சொர்க்கவிலாசம் என்று மன்னன் அழைத்து மகிழ்ந்திருந்தான் போலும். இதன் மேலிருந்த ஸ்தூபிகளும் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தன. இவ்விடத்தில் கல் பீடத்தின் மேல் நடுவில் யானைத் தந்தத்தாலான நுண்ணிய வேலைப்பாடு மிகுந்த ஒரு சாலை (மண்டபம்) வைக்கப்பட்டிருந்தது. அதன் நடுவில் இரத்தினங்களால் செய்யப்பட்ட அரியணை இருந்தது. அதன் மீது அமர்ந்து தான் திருமலை மன்னன் செங்கோல் நடத்தினான்.

## செங்கோல் விழா

ஆண்டுதோறும் சித்திரைத் திருவிழாவில் எட்டாம் நாள் திருமலை மன்னன் அங்கயற்கண்ணி அம்மைக்கு கோயிலில் முடிசூட்டுவிழா நடத்தி அங்கு அம்மனிடமிருந்து செங்கோலைப் பெற்று வீதி உலாவாகக்

கொணர்ந்து இவ்வரண்மனையின் இந்த சொர்க்கவிலாசத்தில் சிறப்பாக அலங்கரித்த அரியணையில் செங்கோலை அமர்த்தி தான் அருகில் கீழே அமர்வார். செங்கோலுக்குச் சிறப்பாக வழிபாடுகள் நடக்கும். குழுமியிருக்கும் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்படும். அன்று முழுவதும் செங்கோல் அரியணையில் இருக்கும். மறுநாள் திருமலை மன்னர் செங்கோலுக்கு மறுவழிபாடு செய்து, கோயிலுக்கு எடுத்துச்சென்று அன்னையின் அடியில் வைத்து வணங்குவது வழக்கம், அன்னையின் அடியவராக அவர் நாட்டை ஆள்வதை இது குறிக்கும்.

## நவராத்திரி விழா

நவராத்திரி விழாவில் ஒன்பது நாட்களும் திருமலை மன்னர் சிறப்பாக தன்னை அலங்கரித்துக் கொண்டு இங்கு அரியணையில் கொலு வீற்றிருப்பார். மாற்றரசர்கள் எல்லாம் இங்கு அவருக்குத் திறை செலுத்துவர்.

## அந்தப்புரம்

சொர்க்கவிலாசத்தின் மேற்கில் அந்தப்புரம் இருந்தது. தென்மேற்கில் கருங்கல் தூண்கள் கொண்ட ஒரு இடம் இருக்கிறது. இங்கு இரண்டு அறைகள் இருந்தன. இப்பொழுது உள்ளது ஒன்றின் பகுதியே. இங்கு அரச மாதேவியரும், பிற பெண்டிரும் இசையும், இலக்கியமும் கேட்டு மகிழ்வர். இதன் தென்மேற்கு மூலையில் அரண்மனையின் மேலே செல்ல படிகள் இருக்கின்றன. அங்கே பல பகுதிகளில் சுற்றி வர வசதி இருக்கிறது. திருமலை மன்னர் தன் மனைவியருடன் மேலே சென்று சுற்றி வரும்போது, கீழிருந்து மக்கள் கண்டு வணங்குவர்.

## நாடகசாலை

சொர்க்கவிலாசத்தின் வடமேற்கில், கிழக்கு மேற்காக நீண்ட, மிகவும் எழில் வாய்ந்த ஒரு பகுதி இருக்கிறது. இதன் நடுப்பகுதி தாழ்ந்தும் சுற்றிலும் திண்ணைபோல் உயர்ந்தும் உள்ளன. தூண்களையும் மேல் பகுதிகளையும் அழகிய சுதை உருவங்கள்



அலங்கரிக்கின்றன. இதன் மேற்கில் மேலே செல்வதற்கு மாடிப்படிகள் உள்ளன. இதுவே நாடகசாலை என்று குறிக்கப்படுவது. மாலை நேரங்களில் திருமலை மன்னன் தன் பெண்டிருடனும் உற்றார் உறவினருடனும் இங்கு போந்து நாட்டியமகளிர் ஆடும் பல கூத்துகளைத் தீவர்த்தி வெளிச்சத்தில் கண்டு களிப்பது வழக்கம்.

## ஆயுதசாலை முதலியன

அந்தப்புரத்தின் மேற்கில் ஆயுதசாலை இருந்தது. நாடகசாலையின் மேற்கில் வசந்தவாவி என்னும் நீர்த்தடாகம் இருந்தது. இதற்கும் வடக்கில் மல்யுத்தம் செய்யுமிடம், ஆட்டுக்கிடாய் சண்டை செய்யுமிடம் முதலிய இடங்கள் இருந்தன. இவற்றிற்கும் மேற்கில் உற்றார், உறவினர் வசிக்கும் நீண்ட பல கட்டடங்கள் இருந்தன.

## தேவி பூசைக் கோயில்

நாடகசாலையின் வடகிழக்கில், கிழக்கு நோக்கிய கோயில் ஒன்று இருந்தது. இதன் முகப்பிலும், உள்ளும் கருங்கல் பணிகள் நிறைந்திருந்தன. இங்கு இராஜராஜேச்வரியையும், மற்ற பிற தெய்வங்களையும் திருமலை நாயக்கர் நாள்தோறும் வணங்குவார். இக்கோயிலின் முன்னர் ஒரு நீர்வாவியும் மலர்வனமும் இருந்தன.

## இரங்கவிலாசம்

இக்கோயிலின் வடக்கில் ஒரு சந்துத் தெருவில் நெடிய பத்துத் தூண்கள் இன்றும் நிற்கின்றன. இவை மறைந்த அரண்மனையின் பகுதியே. இவற்றின் மேற்கில் தான் ரங்க விலாசம் இருந்தது. சொர்க்கவிலாசம் போல் இது அமைந்திருக்க வேண்டும். இதில் திருமலை நாயக்கரின் தம்பி முத்தியாலு நாயக்கர் வசித்தார். இதன் மேற்கில் சந்திரிகை மேடை என்னும் ஒரு கட்டடம் இருந்தது.

இவற்றின் வடக்கில் தெற்கு மாசிவீதியை நோக்கி ஒரு நுழைவாயில் இருந்தது. இங்கு காவல் வீரர்கள் இருந்தனர். பல பரிச்சின்னங்களும் ஆயுதங்களும் இங்கு வைக்கப்பட்டிருந்தன.

## அரண்மனை வாயில்

பத்துத் தூண்களின் கிழக்கில் அரண்மனையின் நுழைவாயில் இருந்தது. அதன் முகப்பு சிறந்த வேலைப்பாடுகளுடன் திகழ்ந்தது. அங்கு 18 வித இசைக்கருவிகள் இசைக்கும் இடமிருந்தது. இப்பகுதியையே நவ்பத்கானா என்று கூறுவர். இது இருந்த இடமே நவ்பத்கானா தெரு என்று அழைக்கப்படுகிறது. நூறு ஆண்டுகளுக்கும் முன்னர் கூட இக்கட்டடம் இருந்தது. ஆனால் பழுதடைந்திருந்தது. 1858-இல் பழுது பார்க்கப்பட்ட போதிலும் இது அதிக நாள் நிற்கவில்லை. இதற்கும் கிழக்கில் தான் பல்லக்கு முதலிய வாகனங்கள் வைக்கப்பட்டிருந்தன.

## சுற்றுமதில்

இவை அனைத்தையும் சுற்றி ஒரு மதில் இருந்தது. இதைப் பாரிமதில் என்பர். சென்ற நூற்றாண்டில் கூட எஞ்சியிருந்த இம்மதில் 900 அடி நீளமும் 660 அடி அகலமும் 40 அடி உயரமுமிருந்ததாம். மிகவும் அபாய நிலையிலிருந்ததால், 1837- இல் இச்சுவர் இடித்துத் தள்ளப்பட்டதாம். இம்மதிலுக்கு வெளியில், மேற்கில் மலர்வனங்கள் இருந்தன. இவற்றின் நடுவில் ஒரு கட்டடம் இருந்தது. அதில் திருமலை மன்னன் மனைவியருடன் தங்குவது வழக்கமாம்.

## அரண்மனைப்பகுதி மறைவு

இவ்வெழில் வாய்ந்த அரண்மனையின் பகுதியைத் திருமலை மன்னரின் பெயரன் சொக்கநாத நாயக்க மன்னனே இடித்தான். மதுரையிலிருந்து திருச்சிக்கு அவன் தலைநகரை மாற்றிய போது இங்கிருந்து இடித்த பொருள்களை திருச்சிக்கு எடுத்துச்சென்று அங்கு ஒரு அரண்மனை எடுக்க முயன்றான். அவன் முயற்சியில் வெற்றி பெறவில்லை. சென்ற நூற்றாண்டில் கூட இடிந்த சில பகுதிகள் நின்று கொண்டிருந்தன. காலப்போக்கில் பல பகுதிகள் அழிந்துவிட்டன.

## அரண்மனை பிழைத்தது

கி.பி. 1857 – லேயே இப்போது எஞ்சியுள்ள சொர்க்கவிலாசத்தின் பல பகுதிகள் விரிசல் கண்டிருந்தன. கி.பி. 1858 – இல் பெய்த கடும் மழையில் மேற்கு பகுதியில் ஒரு சுவர் வீழ்ந்தது. பல பகுதிகளுக்குச் சேதம் ஏற்பட்டது. 1868 – இல் சென்னை கவர்னராயிருந்த லார்டு நேப்பியர் இவ்வரண்மனையின் அழகைக் கண்டு இதில் மிகவும் ஈடுபாடு கொண்டு இதை உடனடியாகக் காக்க வகை செய்தார். 1872-க்குள்ளாக இரண்டு லட்சம் ரூபாய் செலவில் பழுது பார்க்கப்பட்டது. இடிந்த சில பகுதிகள் கட்டப்பட்டன. மேலே விரிசல் கண்ட பகுதிகளில் இரும்புக் கம்பிகள் போட்டு முறுக்கப்பட்டன. சுதை வேலைகள் பழுது பார்க்கப்பட்டன. வண்ணங்கள் ஓரளவுக்கு முன்போல் தீட்டப்பட்டன. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இவ்வரண்மனையின் எழிலையும் தொன்மையையும் இப்பொழுது காத்து வருகிறது.



## மதுரைக் கோயில் திருப்பணி

உரக்கவெகு ரொக்கம் கொடுத்துப் படங்கு தூண்
உத்திரம் முதல் பழங்கல்
ஒடிந்தன பிடுங்கி நவமாய் அமைத்துக் காரை
யோடு சீரணம் அகற்றி
அரைத்த சுண்ணாம்பை வெல்லச்சாறு விட்டுநன்
றாய்க் குழைத்துச் செங்கலும்
அடுக்காப் பரப்பிக் கடுக்காயொடு ஆமலகம்
அரிய தான்றிக்காய் உழுந்து
ஒருக்கால் இருக்கால் இடித்து நன்னீரினில்
ஊறிய கடுஞ்சாறும் விட்டு
ஊழிக்காலங்களில் அசையாத வச்சிரக்
காரை விட்டோங்கும் அம்மை
சிரக்காலம் வாழவே மீனாட்சி கோயிலும்
செப்ப மிடுவித்து நன்றாய்ச்
செய்வித்த புண்ணியம் சதகோடி புண்ணியம்
திருமலை மகீபனுக்கே

-திருப்பணிமாலை

## திருமலை மன்னன் வரலாறு

| | |
|---|---|
| தந்தை | முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் |
| பிறந்த நாள் | சகவருடம் 1505, பார்த்திப |
| | ஆண்டு, தைத் திங்கள், |
| | பூசநாள், (கி.பி. 1584) |
| பெயர் | திருமலை சவுரி நாயுனு |
| | அய்யலுகாரு |
| பட்டங்கள் | திருமலைபூபன், |
| | பரராசசேகரன் |
| | பரராசபூஷணன் முதலியன |
| அரசு கட்டில் ஏறியது | கி.பி. 1623 |
| ஆண்ட காலம் | 1623 முதல் 1659 வரை |
| ஆண்ட பகுதிகள் | மதுரை,திருச்சி, |
| | திருவனந்தபுரம், |
| | திருநெல்வேலி, |
| | இராமநாதபுரம், சிவகங்கை, |
| | திண்டுக்கல், புதுக்கோட்டை, |
| | சேலம், கோவை |
| தலைநகர் | முதலில் திருச்சியிலிருந்து |
| | 1634 - இல் மதுரைக்கு |
| | மாற்றப்பட்டது. |
| போர்கள் | மைசூர் போர், |
| | திருவாங்கூர்போர், |
| | இராமநாதபுரம் போர், |
| | செஞ்சிப் போர், |
| | மைசூர் மூக்கறுப்புப் போர் |
| தானைத் தலைவன் | தளவாய் இராமப்பய்யன் |
| துணைப் படைத்தலைவன் | அரங்கண்ண நாயக்கர் |
| மதுரைத் திருப்பணிகள் | தெப்பக்குளம், புதுமண்டபம், |
| | அங்கயற்கண்ணி கோபுரம், |



| | |
|---|---|
| | முக்குறுணிப் பிள்ளையார், |
| | துவாரபாலகர்செப்புத் |
| | திருமேனிகள், |
| | விலைமதிப்பிலா அணிகள், |
| | இருபெரும் தேர்கள், |
| | அரண்மனை |
| ஏற்படுத்திய திருவிழாக்கள் | சித்திரைப் பெருவிழா, |
| | வைகாசி வசந்த விழா, |
| | ஆவணித் திருவிழா, |
| | புரட்டாசி நவராத்திரிவிழா, |
| | தைத் தெப்பத் திருவிழா |
| திருப்பணிசெய்த பிற இடங்கள் | அழகர்கோயில், |
| | திருப்பரங்குன்றம், |
| | திருவரங்கம், திருவானைக்கா, |
| | திருவில்லிபுத்தூர், |
| | திருநெல்வேலி |
| புலவர்களும், நூல்களும் | குமரகுருபரர் |
| | மீனாட்சியம்மைப் |
| | பிள்ளைத்தமிழ், |
| | கந்தர் கலிவெண்பா |
| | பிள்ளைப்பெருமாள் |
| | அய்யங்கார் |
| | அஷ்டபிரபந்தங்கள் |
| | சுப்பிரதீபக் கவிராயர் |
| | விறலிவிடுதூது |
| | கூளப்பநாயக்கன் காதல் |
| | நீலகண்டதீக்ஷிதர் |
| | சமஸ்கிருத நூல்கள் |
| | இராபர்ட்டி நோபிளி |
| மறைவு | கி.பி. 1659, விளம்பி ஆண்டு, |
| | மாசித்திங்கள் 4 - ஆம் நாள் |

# திருமலை மன்னர் அரண்மனை அகழ்வைப்பகம்

**அரண்மனை**

மதுரை நாயக்க மரபில் ஏழாவதாக அரசுரிமை பெற்ற மன்னர் திருமலை நாயக்கர். இவர் கி.பி. 1623 முதல் 1659 வரை ஆட்சி செய்தவர். இவர் காலத்தில் திருச்சியிலிருந்த தலைநகரம் மதுரைக்கு மாற்றப்பட்டது. அரச நிர்வாகத்திற்கென ஓர் அரண்மனை கட்ட இவர் திட்டமிட்டார். இவரது ஆணைக்கு ஏற்ப இத்தாலிய கட்டிடக்கலை வல்லுநர் ஒருவரால் அரண்மனை வடிவமைக்கப்பட்டது. கி.பி. 1636ல் இவ்வரண்மனை கட்டி முடிக்கப்பட்டது.

சொர்க்கவிலாசம், ரங்கவிலாசம் என இருபிரிவுகளாக இவ்வரண்மனை கட்டப்பட்டுள்ளது. சொர்க்கவிலாசத்தில் தர்பார் மண்டபம், மந்திரிகள் மண்டபம், பிரார்த்தனைக்கூடம், நாடகசாலை ஆகிய பகுதிகளும், ரங்கவிலாசத்தில் அந்தப்புரம், குடியிருப்புப் பகுதிகள், பூந்தோட்டம், நீரூற்று, ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் ஆகியவையும் அமைந்திருந்தன. தற்போது நான்கில் ஒரு பகுதியே எஞ்சியுள்ள இவ்வரண்மனை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினரால் வரலாற்றுச் சின்னமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வரண்மனையின் நாடகசாலைப் பகுதியில் இத்துறையால் 1977-ஆம் ஆண்டு ஓர் அகழ்வைப்பகம் அமைக்கப்பட்டுள்ளது.

**நாடகசாலை**

சொர்க்கவிலாசத்தின் வடமேற்குப் பகுதியில் கிழக்கு மேற்காக நீண்ட எழில்வாய்ந்த ஒரு கூடம் அமைந்துள்ளது. இதுவே நாடகசாலை எனப்படும் பகுதியாகும். இதன் நடுப்பகுதி தாழ்ந்து ஓர் அமர்வு அரங்கம் போலவும், சுற்றிலும் திண்ணைபோல் உயர்ந்த தூண்களும், அவற்றில் யாளி முதலான சுதை உருவங்களும் அழகாக வடிவமைக்கப் பட்டுள்ளன. தூண்களின் ஒவ்வொரு சுதை வேலைப்பாடும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட எழில் கொண்டது. இவ்வரண்மனையும், அதில் அமைந்துள்ள இந்நாடகசாலைப் பகுதியுமே ஒரு அருங்காட்சிக்கூடம் என்றால் அது தகும். அத்தகைய எழிலமைந்த நாடகசாலைப் பகுதியில் பாண்டிய நாட்டுப் பகுதியின் சிற்பக் கலையையும், வரலாற்றையும் விளக்கும் வகையில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் தொல்பழங்காலச் சின்னங்கள், ஓவியங்கள், முற்பாண்டியர் சிற்பங்கள், சோழர், பிற்பாண்டியர், நாயக்க மரபினரின் சிற்பங்கள், அகழாய்வில் கிடைத்த மட்கலங்கள், கல்வெட்டுப் பொறித்த கற்பலகைகள், இரும்புக் கருவிகள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**பழைய கற்காலக் கருவிகள்**

பழைய கற்காலக் கருவிகள் மதுரை மாவட்டத்திலோ அல்லது பிற தென்மாவட்டங்களிலோ கிடைக்கவில்லை. இன்றைய விருதுநகர் மாவட்டத்தில் ஆவியூர் என்னும் ஓரிடத்தில் மட்டும்ஒரு பழைய கற்காலக் கருவியை ராபர்ட் புரூஸ்புட் என்னும் நிலப்பொதியியல் ஆய்வாளர் சேகரித்துள்ளார். இக்கருவி யாரேனும் ஒரு வழிப்போக்கர் மூலம் இப்பகுதிக்கு வந்திருக்கலாம். பழைய கற்கால மக்கள் வாழ்க்கை இப்பகுதியில் இல்லை. எனினும் அருங்காட்சியகத்தைக் காண வரும் பார்வையாளர்களுக்கு உணர்த்தும் வகையில் இங்கு சில பழைய கற்காலக் கைக்கோடரிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை கோடரிகள், சுரண்டிகள் ஆகிய வகையின . திருவள்ளூர் மாவட்டம் பூண்டிப் பகுதியிலிருந்து சேகரித்து வரப்பட்டவை. இவற்றின் காலம் ஒரு லட்சம் ஆண்டுக்கு மேல் ஆகும். இவை குவார்ட்சைட் என்னும் கல் வகையைச் சேர்ந்தவை.

**நுண்கற்காலக் கருவிகள்**

மதுரை மாவட்டத்தில் துவரிமான் பகுதிகளில் நுண்கற்கருவிகள் கிடைத்துள்ளன. கூர் அம்புமுனைகள், பிளேடுகள் ஆகியவை சேகரிக்கப்பட்டுள்ளன. இக்கருவிகள் செய்வதற்குரிய மூலக்கற்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

**புதிய கற்காலக் கருவிகள்**

உணவு சேகரிக்கும் வழக்கத்திலிருந்து வேளாண்மை மூலம் உணவு உற்பத்தி செய்யும் நிலைக்கு மனிதன் முன்னேறிய காலம்

புதியகற்காலம். கல் ஆயுதங்களை வளவளப்பாகவும், கூர்மையாகவும் மாற்றிப் பயன்படுத்திய காலம் இது. இக்காலக் கற்கருவிகள் மதுரை மாவட்டத்தில் வெள்ளாங்குளம், துவரிமான் போன்ற இடங்களிலும், தேனி மாவட்டம் செலமலை என்னும் ஊரிலும் கண்டறியப்பட்டுள்ளன. அக்காலக் கருவிகள் சில மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை சுமார் 5000 ஆண்டுகட்கு முற்பட்டவையாகும்.

### பெருங்கற்காலச் சின்னங்கள்

பெருங்கற்காலம் அல்லது இரும்புக்காலம் என்னும் கால வரையறை தமிழக வரலாற்றில் சங்ககாலத்தோடு ஒன்றுவதாகும். இக்காலத்தில் மக்களின் ஈமச்சின்னங்கள் பெரும் பெரும் கற்களைக் கொண்டு பலவடிவங்களில் அமைக்கப்பட்டன. அதனால் இக்காலம் பெருங்கற்காலம் எனப்படுகிறது. இக்காலத்தில் சக்கரத்தால் பானை வனையும் தொழில் வழக்கத்திற்கு வந்தது. குறிப்பாக கருப்பு சிவப்பு வண்ணப்பானை ஓடுகள் இக்காலத்தில் பெரும் அளவில் பயன்பாட்டில் இருந்தன. மதுரையில் கோவலன் பொட்டல் என்ற இடத்தில் மேற்கொண்ட அகழாய்வில் முதுமக்கள் தாழிகளும், பெருங்கற்கால கருப்பு சிவப்பு மட்கலங்களும் வெளிப்பட்டன. அவை இங்கு தனிக்காட்சிப் பேழையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மதுரை நகருக்கு அருகில் விளாங்குடி, பரவை, அனுப்பானடி ஆகிய இடங்களில் இத்தகைய கலன்கள் கிடைத்துள்ளன.

இக்காலத்தில் இரும்புக் கருவிகளாக சிறிய வாள், சிறு கத்திகள், திரிசூலம் போன்ற கருவிகளும் தனிக் காட்சிப் பேழையில் இடம் பெற்றுள்ளன. இவையும் சுமார் 2000 ஆண்டுகட்கும் முற்பட்டவையாகும்.

### முற்பாண்டியர் காலச் சிற்பங்கள்

இவ்வருங்காட்சியகத்தில் பாண்டிய நாட்டுப் பகுதியில் கிடைத்த பல அரிய கற்சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை முற்பாண்டியர், பிற்பாண்டியர், சோழர், விசயநகரர் மற்றும் நாயக்கர் கலைப்பாணியைச் சேர்ந்தவை.

### நரசிம்மர்

சுகாசனத்தில் அமர்ந்த நிலையில் உள்ள இச்சிற்பம் கி.பி.8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. நெல்லை மாவட்டம் ராசாக்கள்மங்கலம் என்னுமிடத்திலிருந்து இச்சிற்பம் கொண்டுவரப்பட்டுள்ளது. சுமார் 4 அடி உயரமும் 3 அடி அகலமும் கொண்ட சிற்பம் இது. தலைப்பகுதி சிம்ம வடிவிலும் அதன் பிடரிமயிர் கழுத்தின் கீழ்பரந்து படிந்துள்ள நிலையிலும் உள்ளது. வாய் நன்கு திறந்து அச்சமூட்டும் தன்மையில் காட்டப்பட்டுள்ளது. பன்னிருகரங்களில் பிரயோகச் சக்கரமும் சங்கும் தாங்கியிருக்க, கீழ் வலக்கரம் காக்கும் கரமாகவும் (அபயம்) கீழ் இடக்கரம் தொடைமீது வைத்து அமர்ந்த நிலையிலும் உள்ளது.



மூன்று பட்டைகளுடன் கூடிய புரிநூல், பட்டையான உதரபந்தம், கடிசூத்திரத்துடன் கூடிய ஆடை, கைகளில் கனமான காப்புகள், தோள்களில் கேயூரம் என்னும் அணிகலன்கள் அழகு செய்கின்றன. பாதம் வரை ஆடை, சிற்பம் பத்ர (செவ்வக) பீடத்தில் அமர்ந்துள்ள நிலையில் வடிக்கப்பட்டுள்ளது.

### அணங்குகள் இருவர்

இராசாக்கள்மங்கலம் வழங்கிய இச்சிற்பங்கள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. வலக்காலை மடித்துவைத்து இடக்காலைக் குத்துக்காலாக ஊன்றி அமர்ந்துள்ள அழகிய இளம் பெண்கள், தலையில் கரண்ட மகுடம். காதுகளில் பத்ரகுண்டலம் கழுத்தில் இரண்டு வித மணிமாலைகள், ஒற்றைப் புரிநூல் ஆகியவை அழகுக்கு அணி சேர்க்கின்றன. இருகரங்களில் இடக்கையில் தாமரை மலர் பிடித்திருக்க வலக்கை தொடைமீது வைத்து அமர்ந்த நிலையில் எழிலார்ந்த இளமங்கையராகக் காட்சி தருகின்றனர்.

### திருமால்

நெல்லை மாவட்டம் சாம்பவார் வடகரை தந்த கலைச்செல்வம். 4 அடி உயரமுள்ள கருங்கல்லால் ஆன அழகான சிற்பம். தலையில் கிரீட மகுடம் அழகு செய்ய இருகாதுகளிலும் மகர குண்டலங்கள் ஒளிர்கின்றன. கழுத்தில் பட்டையான ஒரு அணிகலன் மட்டுமே காணப்படுகிறது. மேலும் பட்டையான புரிநூல், தோள்வளை, கடகம் ஆகிய அணிகலன்களும் உண்டு. சுகாசனத்தில் அமர்ந்துள்ள இத்திருமால் நான்கு கைகள் பெற்றுள்ளார். மேலிரு கரங்களில் சக்கரமும், சங்கும் அணி செய்ய, முன் வலக்கரம் காக்கும் கரமாகவும், இடக்கரம் தொடை மீது வைத்தும் அமர்ந்துள்ள இச்சிற்பம் முற்பாண்டியர் சிற்பக்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**மண்மகள்**

திருமாலோடு இடப்பக்கத்தில் இணையாக இருந்த (பூமகள்) மண்மகளின் எழிற்கோலம், இரண்டு கரங்களுடன் வணங்கும் நிலையில் உள்ள சிற்பம் சுமார் 2 அடி உயரமே உள்ளது. தலையில் கரண்ட மகுடம், காதுகளில் பத்ரகுண்டலம், தோள்வளை, கடகம் ஆகியவை காட்டப்பட்டுள்ளன. மண்டிபோட்டு அமர்ந்த நிலையில் உள்ள இச்சிற்பம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

**கீழ்மாத்தூர் சிற்பங்கள்**

மதுரை நகரின் மேற்கில் வைகையின் தென்கரையில் அமைந்த கீழ்மாத்தூரில் முற்பாண்டியர் காலக் கோயில் ஒன்று அழிந்து போயிற்று. அங்கிருந்த பல அரிய கற்சிற்பங்களைச் சேகரித்து வந்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**திருமால்**

சுமார் 3 அடி உயரமுள்ள நின்ற நிலையில் உள்ள இச்சிற்பம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. தலையில் கிரீட மகுடம் அழகு செய்ய இருகாதுகளிலும் மகர குண்டலங்கள் மிளிர்கின்றன. தோள்களில் வாகுமாலை கழுத்தில் பதக்கம், மணிஆரம் ஆகியவை அணி செய்கின்றன. முப்புரிநூல், உதரபந்தம், கடிசூத்திரம், பீதாம்பர ஆடை ஆகியவை காணப்படுகின்றன. இச்சிற்பம் நான்கு கரங்களுடன் திகழ்கிறது. மேல் வலக்கரத்தில் தாமரை மொட்டும், மேல் இடக்கரத்தில் சங்கும் இடம் பெற்றுள்ளன. கீழ்வலக்கரம் அபயமாக இருந்து உடைந்துள்ளது. கீழ் இடக்கரம் கதை ஒன்றினைப் பிடித்துள்ளது. இவ்விதம் தாமரை மொட்டும் கதையும் இடம்பெறுவது மிகவும் அரிதான காட்சியாகும்.

**துர்க்கை**

மிகவும் எழில் வாய்ந்த சிற்பம் நின்ற நிலையில் உள்ளது. கரண்டமகுடம் தலையில் அணி செய்ய, காதுகள் இரண்டிலும் மகரக் குழைகள், கழுத்தில் இருவிதமான மணிமாலைகள் உள்ளன. மார்புக்கச்சை, மெல்லிய புரிநூல், கேயூரம் என்னும் தோள் வளை,



முன்கைகளில் கடகம் அணி செய்கின்றன. பாதம் வரை ஆடை, கால்களில் சிலம்புகள், நான்கு கரங்களில் மேலிரு கரங்கள் சக்கரம் சங்கு ஏந்தியிருக்க, கீழிருகரங்கள் ஆகிய வரதமாகவும் அழைத்து வழங்கும் கரம் கட்டியவலம் பிதமாகவும் காட்சி தருகின்றன. இச்சிற்பம் கி.பி.9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

**சாமுண்டா**

சப்தமாதர்களில் ஏழாவதாக (இறுதியாக) வைத்து எண்ணப்படுபவள் சாமுண்டா என்னும் பெண் தெய்வம். பார்வதியின் மறுவடிவமே இவள். செவ்வக பீடத்தில் இடது காலை மடித்து வலக்காலைத் தொங்கவிட்டு சுகாசனத்தில் அமர்ந்த தோற்றம். தலையில் விரிசடை பாரம். அதன் மத்தியில் கபாலம் உள்ளது. வலக்காதில் மகர குண்டலம். இடக்காதில் பத்ர குண்டலம், கழுத்தில் இரண்டு வித ஆரங்கள், மெல்லிய புரிநூல் நான்கு கரங்களுடன் அமர்ந்த நிலையில் உள்ள சிற்பம். மேலிரு கரங்களில் திரிசூலமும், மணியும் பிடித்துள்ளாள். கீழ்வலக்கரம் அழைத்து வரமளிக்கும் (ஆகூய வரதம்) கரமாகவும் கீழ் இடக்கரம் கபாலம் ஏந்தியும் உள்ளது. மிகவும் அரிதான சிற்பம் இது. இதன் காலம் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டாகும்.

**பைரவர்**

சமபங்க நிலையில் நிற்கும் 3 அடி உயரமுள்ள கற்சிற்பம். அனல் மகுடம் தாங்கி இரண்டு காதுகளிலும் ஓலைக் குண்டலங்கள் மின்ன மார்பில் மூன்று விதமான மணிமாலைகளுடன் தோன்றுகிறது. மெல்லிய புரிநூல், பட்டையான மணிக்கற்கள் பதித்த உதரபந்தம், இடுப்பில் அரவமே அரைஞாண் கொடியாகச் சுற்றியுள்ளது நிர்வாணக் கோலம், கைகளில் தோள்வளை, (கேயூரம்) வாகுமாலை, காப்பு முதலியவை அணி செய்கின்றன. கால்களில் கொலுசும் உண்டு. நான்கு கரங்களில் மேலிருகரங்கள் திரிசூலமும் கபாலமும் ஏந்தியுள்ள எழிலான சிற்பம் இது. கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டினது.

**அந்திராணி**

சப்தமாதர் குழுவில் ஒன்றாக வைக்கப்பட்ட இச்சிற்பம் சுகாசனத்தில் அமர்ந்த நிலையில் உள்ளது. தலையில் கிரீடமகுடம்,

காதுகளில் மகரகுண்டலம். கழுத்தில் ஒரே ஒரு பட்டையான அணி, மார்புக்கச்சை காட்டப்பட்டுள்ளது. பாதம் வரை ஆடை காணப்படுகிறது. நான்கு கரங்களில் மேலிருகரங்கள் வஜ்ரப்படையும் அங்குசமும் காணப்படுகிறது. கீழ்வலக்கரம் காக்கும் கரமாகவும், கீழ் இடக்கரம் தொடைமீது வைத்த நிலையிலும் உள்ள பத்தாம் நூற்றாண்டுச் சிற்பம் இது.

### சமணச் சிற்பங்கள்

பாண்டிய நாட்டில் குறிப்பாக மதுரை மாவட்டத்தில் சமணசமயம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.12-ஆம் நூற்றாண்டு வரையும் செல்வாக்குப் பெற்றிருந்தது. பல சின்னங்கள் இப்பகுதியில் கண்டறியப்பட்டுள்ளன. சில எழில் வாய்ந்த சிற்பங்கள் இக்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன.

### மகாவீரர்

விருதுநகர் மாவட்டம் புலியூரான் என்னும் கிராமத்தில் கிடைத்தது இச்சிற்பம். அர்த்தபரியங்க ஆசனத்தில் அமர்ந்துள்ள 3 அடி உயரம் கொண்ட சிற்பம் இது. தலையில் முக்குடை அலங்கரிக்க அதன் பக்கங்களில் அசோக மரத்தின் கிளைகள் வளைந்து வளைந்து பூத்துள்ளன. அதற்கும் கீழாக ஒளிவட்டம் (பிரபை மண்டலம்) அணி செய்கிறது. தியானநிலையில் அமர்ந்துள்ள இவரது காதுகள் நீண்டு தொங்குகின்றன. அரியாசனத்தில் அமர்ந்துள்ளார். இருபுறமும் இயக்கர் இருவர் சாமரம் ஏந்தி நிற்கின்றனர். இச்சிற்பம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

### பார்சுவநாதர்

இதுவும் புலியூரானில் கிடைத்த சிற்பமே. சுமார் 4 அடி உயரம் உள்ள சிற்பம் அர்த்தபரியங்க ஆசனத்தில் தியானக் கோலத்தில் அமர்ந்துள்ளார். தலைக்கு மேல் ஐந்தலை அரவம் படம் விரித்துள்ளது. நீண்ட காதுகள் மட்டுமே, ஆடை அணிகலன் எதுவும் இன்றி அணியாத அழகர் எனும்படி அமர்ந்துள்ளார்.



### சமணத்துறவி

வடுகப்பட்டியில் (வாடிப்பட்டி - மதுரை மாவட்டம்) கிடைத்த இச்சிற்பம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. தாமரை பீடத்தில் இருகைகளையும் இணையாகத் தொங்கவிட்டு நின்ற நிலையில் உள்ள இத்துறவியின் சிற்பம், தலையில் ஒரே குடையும், நீண்ட காதுகளும் பெற்றுள்ளார். தலையின் இருபுறமும் இரண்டு சாமரங்கள் காட்டப்பட்டுள்ளன. சிற்பத்தின் இடப்புறம் இரண்டு வரிகளில் வட்டெழுத்தில் ஒரு கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.

ஸ்வஸ்திஸ்ரீ மாலைகுளம் இறங்கல் நீ
க்கியஸ்ரீ வர்த்தமான தேவர்

என்பது இக்கல்வெட்டு.

### இயக்கி

சுமார் 4 அடி உயரமுள்ள நின்றநிலையில் உள்ள இச்சிற்பம் ஒரு சமண இயக்கியின் சிற்பமாகும். கரண்டமகுடத்தின் மத்தியில் தீர்த்தங்கரர் ஒருவர் அமர்ந்துள்ளது போல உள்ளதைக்கொண்டு இதனை இயக்கியர் படிமம் எனக்கருதலாம். இரண்டு காதுகளிலும் மகரகுண்டலங்கள் அணி செய்கின்றன. கழுத்தில் பலவிதமான மணிமாலைகள், மெல்லிய புரிநூல் மார்பகங்களுக்கு நடுவில் செல்கிறது. இடையாடை பீதாம்பரமாக உள்ளது. இரண்டு கரங்களில் வலக்கரம் முழங்கை அளவில் உடைந்துள்ளது. இடக்கரம் ஒரு சிறிய இயக்கியின் தலையில் வைத்த நிலையில் உள்ளது. இச்சிற்பத்தின் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு ஆகும்.

### புத்தர்

தியான நிலையில் அமர்ந்துள்ளார் புத்தர். தலைக்கு மேலாக ஒளிவட்டமும் உஷ்னிசா எனும் முடியும் காட்டப்பட்டுள்ளது. ஆசனத்தின் முதுகின் பின்புறம் திண்டு காணப்படுகிறது. மெல்லிய ஆடையும் உள்ளது. முகம் முற்றிலும் தேய்ந்துள்ளது. திருப்பராய்த்துறையில் கண்டறியப்பட்ட இச்சிற்பம் கி.பி.10-ஆம் நூற்றாண்டுக்குரியது.

### சப்தமாதர் சிற்பங்கள்

ஏழு கன்னியர் (சப்தமாதர்) வழிபாடு தமிழகத்தில் கி.பி.7-ஆம் நூற்றாண்டிலிருந்தே செழிப்புற்றிருந்தது. பாண்டிய நாட்டிலும் பல முற்காலக் கோயில்களில் இவ்வழிபாடு இருந்தமைக்கான சிற்பச்சான்றுகள் உள்ளன. இக்காட்சியகத்தில் திருவாதவூரிலிருந்து கொண்டு வரப்பட்ட சப்தமாதர் சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவையாவும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. முற்பாண்டியர் சிற்பக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாய்த் திகழ்கின்றன. மகேஸ்வரி, வைஷ்ணவி, பிராமி, இந்திராணி, கௌமாரி, வராகி, சாமுண்டா என வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

### மகேஸ்வரி

இடக்காலை மடக்கி வலக்காலைத் தொங்கவிட்டு சுகாசனத்தில் அமர்ந்துள்ள இச்சிற்பம் இரண்டடி உயரமுள்ளது. தலையில் சடைமகுடம், இருகாதுகளிலும் பத்ரகுண்டலம், கழுத்தில் ஒற்றை வடப்பதக்கம், மெல்லிய புரிநூல், முன்கையில் வளையல் என அணிகளைப் பெற்றுள்ளது. மார்புக்கச்சை இல்லை. நான்கு கரங்களில் மேலிருகரங்கள் கலசம், அக்கமாலை தரித்துள்ளன. கீழ்வலக்கரம் காக்கும் கரமாகவும், கீழ் இடக்கரம் தொடைமீது வைத்த நிலையிலும் உள்ளன.

### வைஷ்ணவி

கிரீடமகுடம் தரித்து சுகாசனத்தில் அமர்ந்த நிலை. மார்பில் கச்சை காட்டப்பட்டுள்ளது. காதுகள் இரண்டிலும் மகர தோரணங்கள், மற்ற அணிகலன்கள் முந்திய சிற்பத்தில் கூறப்பட்ட தன்மையிலேயே உள்ளன. நான்கு கரங்களுடன் அமர்ந்துள்ள இச்சிற்பம், மேலிரு கரங்களில் பிரயோகச் சக்கரமும், சங்கும் ஏந்தியுள்ளது. கீழ் இருகரங்கள் காக்கும் கரமாகவும், தொடைமீது வைத்த நிலையிலும் உள்ளன.

### பிராமி

நான்கு முகங்களுடன் காட்சி தரும் இச்சிற்பம் கரண்ட மகுடம் சூடி காதுகளில் மகர குண்டலங்களுடன் காட்சி தருகிறது.சுகாசனத்தில்



அமர்ந்த நிலை, எளிமையான அணிகலன்கள், நான்கு கரங்களில் மேல்வலக்கரம் அக்கமாலையும் மேல் இடக்கரம் கலசமும் கொண்டு விளங்குகிறது. முன்வலக்கரம் காக்கும் கரமாகவும் முன் இடக்கரம் தொடைமீது வைத்தும் உள்ளது.

### கௌமாரி

சுகாசனத்தில் அமர்ந்த நிலை. கரண்ட மகுடம். காதுகளில் பத்ரகுண்டலம். கழுத்தில் பட்டையான ஓர் அணிகலன், மார்புக் கச்சையுடன் விளங்குகிறது. மேலிருகரங்களில் வச்சிரமும், சக்திப்படையும் உள்ளன. கீழ்வலக்கரம் அபயமுத்திரை காட்ட கீழ் இடக்கரம் தொடைமீது வைத்த நிலையில் உள்ளது.

### வராகி

முகம் வராக வடிவில் கரண்ட மகுடம் சூடி உள்ளது. சுகாசனம், மார்புக்கச்சை, காதுகள் காட்டப்படவில்லை. மேலிரு கரங்களில் ஆயுதங்கள் எதுவும் இல்லை. கீழ் வலக்கரம் அபயம், கீழ் இடக்கரம் தொடை மீது வைத்தும் உள்ளது.

### சாமுண்டா

விரிந்த சடையும் அதன் மத்தியில் கபாலமும் காட்டப்பட்டுள்ளது. காதுகளிரண்டிலும் மகரக்குழைகள் உள்ளன. மார்புக்கச்சையாக அரவம் காட்டப்பட்டுள்ளது. சுகாசனத்தில் அமர்ந்துள்ள இச்சிற்பம் நான்கு கரங்களுடன் உள்ளது. மேலிருகரங்களில் திரிசூலம், அக்கமாலை தாங்கியிருக்க கீழ்வலக்கரம் அபயமாகவும், கீழ் இடக்கரம் தொடைமீது வைத்தும் உள்ளது.

### ஜேஸ்டாதேவி(சேட்டை)

கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இச்சிற்பம் இரண்டு கால்களையும் தொங்கவிட்டு அமர்ந்துள்ளது. பாண்டிய நாட்டில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலேயே சேட்டை வழிபாடு இருந்தமைக்குத் திருப்பரங்குன்றம் கல்வெட்டு சான்றாக அமைகிறது. பருத்த வயிறும் திரண்ட மார்புமாகக் காட்சியளிக்கிறாள் இத்தெய்வம். கரண்ட மகுடம்,

காதுகளிரண்டிலும் மகரகுண்டலம், கழுத்தில் இரண்டுவித மணியாரம், புரிநூல் இருபிரிவாக வலமும். இடமும் செல்கிறது. பாதம்வரை ஆடை, வலமும், இடமுமாக மகன் (மாந்தன் - கோமுகன்) மகள் மாந்தி ஆகியோர் அமர்ந்துள்ளனர். இரண்டு கரங்களே பெற்றுள்ள இச்சிற்பம், வலக்கையில் தாமரை மலர் தாங்கியுள்ளது அரிதான காட்சியாகும். இடக்கை தொடை மீது வைத்த நிலையில் உள்ளது.

### நடராசர்

மன்னாடிமங்கலம் என்னும் ஊரிலிருந்து கொண்டுவரப்பட்ட இச்சிற்பம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. ஆனந்த தாண்டவம் ஆடும் ஆடவல்லான், தலைப்பகுதியும் பிரபையும் சற்றே உடைந்துள்ளது. முயலகன் மீது வலக்காலை ஊன்றி இடக்காலை இடக்கைக்கு இணையாகத் தூக்கி வளைத்து ஆடும் அற்புதக் கோலம். விரிந்த சடைகள், மேல் வலக்கை உடைந்துள்ளது. மேல் இடக்கை அனல் ஏந்தியுள்ளது. முன் வலக்கை அபய முத்திரை காட்ட முன் இடக்கை வேழ முத்திரையுடன் தோற்றமளிக்கிறது.

### இந்திரன்

யானை மீது அமர்ந்த நிலையில் இந்திரன் சிற்பம். திருவாதவூரில் கிடைத்த கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக் கலைப்படைப்பு. கிரீடமகுடம், பத்ரகுண்டலம், சன்னவீரம், கழுத்தணி காட்டப்பட்டுள்ளன. மேலிரு கரங்கள் சற்றே சிதைந்துள்ளதால் ஆயுதங்களை அறிய முடியவில்லை. கீழ் வலக்கரம் காக்கும் கரமாகவும், கீழ் இடக்கரம் தொடைமீது வைத்தும் உள்ளது.

### நவகண்டச்சிற்பம்

திருச்சுழியல் என்னுமிடத்தில் சேகரிக்கப்பட்ட கி.பி. 12 - ஆம் நூற்றாண்டுச் சிற்பம். வீரன் ஒருவன் தன் வாளால் தன் தலையை அறுத்துக் காளிக்குப்படைக்கும் மரபைக் காட்டும் நவகண்டச்சிற்பம் இது.

### அரங்கநாதர்

அரவணையில் அமர்ந்த திருமால். தலைக்கு மேல் ஐந்தலை அரவம் குடையாக அமைந்துள்ளது. வலது காலைத் தொங்கவிட்டு



இடக்காலைக் குத்துக்காலாக வைத்து அமர்ந்துள்ளார். கிரீடமகுடம், நான்கு கரங்கள், மேலிருகரங்களில் சக்கரமும், சங்கும், கீழ்இருகரங்கள் சற்றே உடைந்துள்ளன.

### மகிசாசுரமர்த்தினி

சுமார் 4 அடி உயரமுள்ள நின்ற நிலையில் உள்ள சிற்பம். எருமைத்தலை மீது திரிபங்க நிலையில் நிற்கும் உருவம். கரண்ட மகுடம் காதுகளில் பத்ரகுண்டலங்கள், பட்டையான கழுத்தணி, மார்புக்கச்சை, மெல்லிய புரிநூல் மார்பின் ஊடாகச் செல்கிறது.

வலக்காலை எருமைத்தலை மீது ஊன்றி இடக்காலை சற்றே வளைத்து நிற்கும் நிலை. அரைஆடை, எட்டுக்கரங்களுடன் காட்சியளிக்கும் அம்மன். நான்கு வலக்கரங்களில் சக்கரம், திரிசூலம், நாண், அபயம் காட்டப்பட்டுள்ளன. இடக்கரங்களில் சங்கு, கேடயம் வில், கபாலம் ஏந்தியும் காட்சிதரும் இச்சிற்பம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

### சரஸ்வதி

கலைகளின் அரசியாக வணங்கப்படும் இத்தெய்வம் ஒரடி செவ்வக பத்ம பீடத்தில் அமர்ந்துள்ளாள். தியான நிலையில் உள்ளாள். தலையில் சடாமுடி, காதுகளில் மகரகுண்டலங்கள், கழுத்தில் மூன்று வித மணியாரங்கள், மெல்லிய புரிநூல், பாதம் வரை ஆடை, நான்கு கரங்களில் மேலிருகரங்கள் உடைந்துவிட்டன. கீழ்வலக்கரம் சின்முத்திரை காட்ட கீழ் இடக்கரத்தில் சுவடி ஏந்தியுள்ள இச்சிற்பம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் கலைப்பாணியில் உள்ளது.

### கங்காளமூர்த்தி

சுமார் 4 அடி உயரம் நின்ற நிலையில் நான்கு கரங்களுடன் காணப்படும் இச்சிற்பம் முற்காலச் சோழர் கலைப்பாணியில் அமைந்துள்ளது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டினதாகும். வலதுகால் முழங்கால் அளவில் உடைந்துள்ளது. சடைமுடியின் மேல் ஒற்றைக் குடை கவிந்துள்ளது. வலக்காதில் மகரகுண்டலம், இடக்காதில்

பத்ரகுண்டலம் எளிமையான ஒற்றை மணிமாலை, நான்கு கரங்களில் மேலிருகரங்களில் உடுக்கையும் சாமரமும் திகழ்கின்றன. முன்வலக்கரம் உடுக்கையை அடிக்கும் நிலையிலும், இடக்கரம் எலும்புக்கூடு கோர்க்கப்பட்ட எலும்பைப் (கங்காளம்) பிடித்த நிலையிலும் உள்ளது. கால்பகுதியின் இருபுறமும் இரு குள்ளபூதங்கள் உள்ளன. வலப்பக்கம் உள்ள பூதம் தாளமிட இடப்பக்கம் உள்ள பூதம் பிச்சாபாத்திரம் சுமந்த நிலையில் உள்ளது.

இத்தகு முக்கிய சிற்பங்கள் தவிர சில ஆடற் சிற்பங்கள் பெண் அணங்கு, சோழ அரசன் திரு உருவம் போன்ற சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

**கல்வெட்டுகள்**

இக்காட்சியகத்தில் சாத்தூரில் கண்டெடுக்கப்பட்ட கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டும் ஏனாதியிலிருந்து சேகரிக்கப்பட்ட கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டும் இடம்பெற்றுள்ளன.

கி.பி.1818-ஆம் ஆண்டில் எல்லிஸ்துரை வைத்த கல்வெட்டு ஒன்றும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர 1795-ஆம் ஆண்டு டேனியல் என்னும் ஆங்கிலேயர் வரைந்த மகாலின் சில தோற்றங்களைக் காட்டும் ஓவியங்கள், சித்தன்னவாசல், தஞ்சை பெரிய கோயில் ஓவியங்களின் மாதிரிகள் காட்சியில் இடம் பெற்றுள்ளன. சுதை உருவங்கள், சுடுமண் பொம்மைகள், சில தமிழ் ஓலைச்சுவடிகள் ஆகியவையும் காட்சியில் இடம் பெற்றுள்ளன.



# கல்வெட்டுக் கலைக்கூடம்

மதுரைப் பகுதி தொன்மையான தமிழ்க் கல்வெட்டுகள் முதன்முதலில் தோன்றிய பகுதியாகும். பழந்தமிழ்க் (தமிழ் பிராமி) கல்வெட்டுகள் இதுவரை 94 தமிழ்நாடு முழுவதும் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 60 கல்வெட்டுகள் மதுரையைச் சுற்றிலும் உள்ளன. எனவே தொல்லெழுத்துக் கலையை மையப்படுத்தும் வகையில் மதுரையில் ஒரு காட்சிக்கூடம் அமைக்க வேண்டும் என்னும் எண்ணத்தில் திருமலை நாயக்கர் அரண்மனையின் பள்ளியறைக்கூடத்தில் கல்லெழுத்துக் கலைக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்காட்சிக்கூடத்தில் தமிழ்பிராமி எழுத்துக் கல்வெட்டுகளின் மாதிரிகளும், வட்டெழுத்துக் கல்வெட்டுகளும், தமிழ்க் கல்வெட்டுகளும் இடம்பெற்றுள்ளன. சாத்தூர், ஏனாதி, நீராவி, கழுகுமலை போன்ற இடங்களில் கண்டறியப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டுகள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நத்தம், சமுத்திராபட்டி, திருவிடைமருதூர், வாடிப்பட்டி போன்ற ஊர்களில் சேகரிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகளும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சங்குகள், ஓலைச்சுவடிகள் ஆகியவையும் இங்கே காட்சிப் பேழைகளில் வைக்கப்பட்டுள்ளன. தமிழ் எழுத்துக்களின் காலவரிசைப்படியான வளர்ச்சியை அறிந்துகொள்ள விரும்புவோர்க்கு இக்கல்லெழுத்துக் கலைக்கூடம் ஒரு வரமாக அமைந்துள்ளது.



பூதேவி- இராஜாக்கள் மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



தேவி- இராஜாக்கள் மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



திருமால்- இராஜாக்கள் மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



திசைக் காவலர்- இராஜாக்கள் மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



செவ்வாய்- இராஜாக்கள் மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



தேவி- இராஜாக்கள் மங்கலம
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



திசைக் காவலர்-இராஜாக்கள் மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு




தேவி- இராஜாக்கல்மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



வராகி-இராஜாக்கள் மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு





தேவி- இராஜாக்கல்மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



கௌமாரி- இராஜாக்கல்மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



முருகன்- இராஜாக்கள் மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



இந்திரன்- இராஜாக்கல்மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



வைணவி- இராஜாக்கல்மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



நரசிம்மர்- இராஜாக்கல்மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



தேவி - இராஜாக்கள் மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



புதன் - இராஜாக்கள் மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



வைணவி - இராஜாக்கள் மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



இந்திரன் - இராஜாக்கல்மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



தேவி - இராஜாக்கல்மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு




திசைக் காவலர் - இராஜாக்கல்மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



சுதை சிற்பம்- இராஜாக்கல்மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு




திருமால்- இராஜாக்கல்மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு




அக்னி- இராஜாக்கல்மங்கலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு






வடபுற மந்திரி மண்டபம் - மேல்பகுதி



மகாலின் மேல்பகுதி




கருங்காலக்குடி சிவன் கோயில் பழுது
பார்க்கும் பணி



சிவலிங்கத்தின் மீது பசு பால் சொரியும் சிற்பம்
கருங்காலக்குடி







தென்புற மணிக் கோபுரம்



வடப்புற மணிக் கோபுரம்




திருமலை நாயக்கர் அரண்மனை நுழைவாயில் பகுதி



திருமலை நாயக்கர் அரண்மனை முற்றப் பகுதியும் – மண்டபமும்





சொர்க்கவிலாச மண்டபத்தின் முன் உள்ள மண்டப விதானப் பகுதி





தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை-600 008